பிரஸார் பாரதி

இந்திய வானொலி, சென்னை-4

25 12 2024 **WEDNESDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாட்டின் முதலாவது நதிநீர் இணைப்புத் திட்டமான **Ken – Betwa** இணைப்பினை பிரதமர் திரு நரேந்திர மோடி, மத்தியப்பிரதேசத்தில் இன்று அடிக்கல் நாட்டி தொடங்கிவைக்கிறார்.

2. தொழில்நுட்பத்தின் பயன்கள் அனைத்துத்தரப்பினரையும் சென்றடைய பல்வேறு திட்டங்களை செயல்படுத்தியவர் பாரத ரத்னா அடல் பிகாரி வாஜ்பாய் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி புகழாரம் சூட்டியுள்ளார்.

3. இந்திய வர்த்தக விமான சேவை கடந்த மாதத்தில் 12 சதவீத வளர்ச்சியை அதிகம் பெற்றிருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

4. மத்திய தரைக்கடல் பகுதியில் ரஷ்ய ராணுவத்தின் சரக்கு கப்பல் விபத்துக்குள்ளாகி மூழ்கியதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

5. சந்தோஷ் கோப்பை கால்பந்து போட்டியில் ஒடிஷா, மேற்குவங்கம், தில்லி, மணிப்பூர், மேகாலயா, கேரளா, ஜம்மு காஷ்மீர், சர்வீசஸ் அணிகள் காலிறுதிக்கு முன்னேறியுள்ளன.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<<<<>>>>>

பாரத ரத்னா அடல் பிகாரி வாஜ்பாயின் நூற்றாண்டு பிறந்த தினத்தையொட்டி, **Ken – Betwa** நதிநீர் இணைப்பு உட்பட பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை மத்தியப்பிரதேச மாநிலத்தில் பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று தொடங்கிவைக்கிறார்.

நாட்டின் முதலாவது நதிநீர் இணைப்புத்திட்டமாக விளங்கும், **Ken – Betwa** இணைப்புத்திட்டம் 49 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், வாஜ்பாயின் நூற்றாண்டு பிறந்த தினத்தை குறிக்கும், நினைவு தபால் தலை மற்றும் நாணயத்தையும் பிரதமர் இவ்விழாவில் வெளியிடுகிறார்.

**<<<<<<>>>>>**

முன்னாள் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாயின் நூறாவது பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இதையொட்டி, புதுதில்லியில் உள்ள அன்னாரது நினைவிடத்தில், குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர், பிரதமர் திரு நரேந்திர மோடி ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

முன்னாள் குடியரசுத் தலைவர் திரு ராம்நாத் கோவிந்த், மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, மத்திய அமைச்சர் திரு ஜெ பி நட்டா, மக்களவைத்

தலைவர் திரு ஓம். பிர்லா, ஆந்திர முதலமைச்சர் திரு சந்திரபாபு நாயுடு உள்ளிட்ட தலைவர்கள் பலர் மரியாதை செலுத்தினர்.

வாஜ்பாய் குறித்து பிரதமர் திரு நரேந்திர மோடி வெளியிட்டுள்ள கட்டுரையில், இந்தியாவை 21-ஆம் நூற்றாண்டுக்கு வழிநடத்திய அரசியல் சிற்பி வாஜ்பாய் என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

தொழில்நுட்பத்தின் பயன்கள் அனைத்துத்தரப்பினரையும் சென்றடைய பல்வேறு திட்டங்களை செயல்படுத்தியவர் என்றும், தில்லி மெட்ரோ உட்பட பல முன்னோடித் திட்டங்களை வாஜ்பாய் செயல்படுத்தினார் என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

பொக்ரான் அணு ஆயுத சோதனையானது நம் நாட்டின் அறிவியல் துறை முன்னேற்றத்தை உலகுக்கு எடுத்துக்காட்டுவதாக அமைந்தது என்றும், அதேபோன்று நடத்தப்பட்ட சோதனைகள் வாஜ்பாயின் தலைமைத்துவத்தை வெளிக்காட்டுவதாக அமைந்தது என்றும் பிரதமர் அந்த கட்டுரையில் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியுறவு அமைச்சராக இருந்தபோது ஐ நா-வில் முதல் முறையாக இந்தியில் உரையாற்றினார் என்றும் திரு நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங், நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்தியதில் முன்னாள் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாயின் பங்கு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது என்று தெரிவித்தார்.

தனது தேர்ந்த அரசியல் அனுபவத்தின்மூலம், நாட்டின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கொள்கைகளை வாஜ்பாய் வடிவமைத்தார் என்று மத்திய

இணையமைச்சர் திரு எல். முருகன் தமது சமூக வலைதள பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<<>>>>>

சுதந்திரப்போராட்ட வீரரும், கல்வியாளருமான பண்டிட் மதன்மோகன் மாலவியாவின் பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி அவருக்கு மரியாதை செலுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், சுதந்திரப்போராட்ட வீரராக மட்டுமல்லாமல், கல்வித்துறையில் ஒரு முன்னோடியாகவும் பண்டிட் மதன்மோகன் மாலவியா ஆற்றிய பணிகள் என்றென்றும் நினைவுகூரக்கத்தகது என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும், தேச வளர்ச்சியில் அவர் ஆற்றிய பங்களிப்பு அனைவருக்கும் ஊக்கம் அளிக்கக்கூடியது என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>

நாடு முழுவதும் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பன்னோக்கு கூட்டுறவு சங்கங்கள் இன்று தொடங்கப்படுவதாக மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், நாட்டின் அனைத்துப்பகுதிகளிலும் உள்ள கூட்டுறவு சங்கங்களை சேர்ந்தவர்களுக்கு இது பயனுள்ளாக அமையும் என்று குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<<>>>>>

இந்திய வர்த்தக விமான சேவை கடந்த மாதத்தில் 12 சதவீத வளர்ச்சியை அதிகம் பெற்றிருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, மத்திய விமான போக்குவரத்து தலைமை இயக்குனர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், கடந்த மாதம் ஒரு கோடியே 42 லட்சம் பயணிகள் உள்ளூர் விமானங்களில் பயணித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் இதேகாலக்கட்டத்தில் பயணித்தவர்களின் எண்ணிக்கையைவிட, இது அதிகம் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>

ரஷ்ய ராணுவத்தின் தளவாட சாதனங்களை ஏற்றிச்சென்ற சரக்கு கப்பல் ஒன்று மத்திய தரைக்கடல் பகுதியில் விபத்துக்குள்ளாகி மூழ்கியதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, அந்நாட்டு வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், கப்பலின் என்ஜின் அறையில் நேரிட்ட வெடிவிபத்தின் காரணமாக அது கடலில் மூழ்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விபத்தில் சிக்கிய 14 ரஷ்ய வீரர்கள் மீட்கப்பட்டுள்ளனர் என்றும், இரண்டு பேரை தேடும் பணிகள் நடைபெற்று வருவதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விபத்துக்கான காரணம் எதுவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை.

<<<<<<>>>>>

தில்லியில், முதலமைச்சர் மகளிர் நலத்திட்டத்தின்கீழ், பெண்களுக்கு மாதந்தோறும் இரண்டாயிரத்து 100 ரூபாய் வழங்கப்படும் என்று வெளியான தகவல் தவறானது என்று தில்லி அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, அது வெளியிட்டுள்ள அறிவிப்பில், இத்திட்டத்தின்கீழ், உதவித்தொகை வழங்குவதாக கூறி, விண்ணப்பங்களை விநியோகிப்பவர்களை நம்ப வேண்டாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்செயலில் ஈடுபடுவோர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தில்லி பிஜேபி தலைவர் திரு வீரேந்திர சச்தேவா, இந்த விவகாரம் குறித்து கேள்வி எழுப்பிய நிலையில், தில்லி அரசு இந்த அறிவிப்பினை வெளியிட்டுள்ளது.

<<<<<<>>>>>

தமிழகத்தின் விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டையில் நடைபெற்றுவரும் மூன்றாம் கட்ட அகழாய்வில் பீங்கானில் தயாரிக்கப்பட்ட உருண்டை வடிவ மணிகள் உள்ளிட்ட பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இது, நம் முன்னோர்கள் கலைப்பொருட்களில் ஆர்வம் காட்டியதை எடுத்துக்காட்டுவதாக உள்ளது என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(சவுண்ட் பைட் - கமலக்கண்ணன் - 40 செகண்ட்ஸ்)*

<<<<<<<>>>>>

நீலகிரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக நிலவிவரும் உறைபனி தாக்கத்தினால், மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால், உதகை, காந்தல், தலைகுந்தா உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த மக்கள் வீடுகளுக்குள் முடங்கும் நிலை ஏற்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(சவுண்ட் பைட் - சரவணன் - 42 செகண்ட்ஸ்)*

<<<<<<<>>>>>

ஆப்கானிஸ்தானில் பாகிஸ்தான் நடத்திய வான்வழி தாக்குதலில் 15 பேர் உயிரிழந்தனர்.

இந்த தாக்குதலுக்கு ஆப்கானிஸ்தானில் உள்ள தாலிபான் பாதுகாப்பு அமைச்சகம் கண்டனம் தெரிவித்துள்ளது.

அப்பகுதியில் உள்ள குடிமக்கள் மற்றும் அகதிகளை குறிவைத்து இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக கூறியுள்ளது.

<<<<<<<>>>>>

காஸா பகுதியில் நிலவிவரும் சண்டை காரணமாக, ஒவ்வொரு மணிநேரத்திற்கும் ஒரு குழந்தை உயிரிழப்பதாக பாலஸ்தீன அகதிகளுக்கான ஐ நா நிவாரணப்பணிகள் முகமை தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, அது வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், யுனிசெஃப் வெளியிட்டுள்ள தரவின்படி, இஸ்ரேல் - ஹமாஸ் அமைப்பினர் சண்டை காரணமாக இதுவரை காஸாவில் 14 ஆயிரத்து 500 குழந்தைகள் உயிரிழந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

சந்தோஷ் கோப்பை கால்பந்து போட்டியில் ஒடிஷா, மேற்குவங்கம், தில்லி, மணிப்பூர், மேகாலயா, கேரளா, ஜம்மு காஷ்மீர், சர்வீசஸ் அணிகள் காலிறுதிக்கு முன்னேறியுள்ளன.

<<<<<<<END>>>>>